TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069842

C

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption Year ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 4/AC/2020 Date நாள் 11.11.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 10.11.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 4.45 PM
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 11.11.2020 at 11.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக SUO. MOTO

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Tamilnadu Civil Supply Corporation, Palacode godown, Dharmapuri District. about 30 Kms north-west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.V.KIRUSHNAN RAAJAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. VETRAYAN
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48/2020 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Deputy Supdt. of Police (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Krishnagiri, I/c Dharmapuri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. V.C. Nagarajan(58), Junior Assistant, Tamilnadu Civil Supply Corporation, Palacode godown, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTO

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 11/11/20

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 11/11/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.11.2020 / 14.00 hrs

Name: பெயர் G.V. KIRUSHNAA RAAJAN
Rank: நிலை Deputy Supdt. of Police, V&AC, Krishnagiri. I/c Dharmapuri ....No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.4/AC/2020 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் வ.எண் 12 க்கான இணைப்பு.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பாலக்கோடு கிடங்கில் பணிபுரியும் பணியாளர்கள் 10.11.2020 ஆம் தேதியில் நெல் அரவை முகவர்களிடம் இருந்து அவர்களால் கிடங்கிற்கு அனுப்பிவைக்கப்படும் அரிசியின் தரம் குறித்த குறைபாடுகள் மற்றும் இதர குறைபாடுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக லாரி டிரைவர்கள் மூலம் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று 10.11.2020 ம் தேதி மாலை 4.45 மணிக்கு அரசு சாட்சிகளான பாலக்கோடு வட்ட வழங்கல் அலுவலர் திரு வெ.ஜெகதீசன் மற்றும் பாலக்கோடு வருவாய் ஆய்வாளர் திரு வே.ஞானதீபன் ஆகியோர் முன்னிலையில் அந்த கிடங்கை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அந்த திடீர் தணிக்கையின் போது இளநிலை உதவியார்களான திரு கே.துரைமுருகன் மற்றும் திரு வி.சி.நாகராஜன், பட்டியல் எழுத்தர் திரு வி.மகேந்திரன் மற்றும் கணினி தட்டச்சர் திரு வி.கிரிதரன் ஆகியோர்களும் பணியில் இருந்தனர். அந்த கிடங்கு பொறுப்பு அலுவலரான கண்காணிப்பாளர் திரு பி.ஜெயபாலன் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தர்மபுரி மண்டல அலுவலகத்திற்கு சென்றிருப்பதாக தகவல் கிடைத்தது. அந்த சோதனையின் போது இளநிலை உதவியாளர் திரு கே.துரைமுருகன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ 3010/- ஐ எடுத்து ஆஜர் செய்து அது தன்னுடைய சொந்த பணம் என்றும் கைசெலவிற்காக வைத்து இருப்பதாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்க ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்தப் பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு மற்றொரு இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்களிடம் ஏதேனும் பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டையின் வெளிப்புற மேல் பாக்கெட்டில் இருந்து பணத்தை மடிப்புடன் எடுத்து அதை செய்தார். அந்தப் பணத்தில் ரூ 740/-தனது சொந்தப் பணம் என்றும் மீதமுள்ள ரூ.21,000/- லாரி ஓட்டுநர்கள் கிடங்கில் பணிபுரியும் சுமைஏற்றும் மற்றும் இறக்கும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்காக தன்னிடம் அவர்கள் கொடுத்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே அவர் கூறிய விளக்கத்தை சரிபார்க்கும் பொருட்டு அந்த அலுவலகத்திற்கு வெளியே இருந்த சில நபர்களை விசாரிக்க அவர்கள் அந்த கிடங்கில் பணிபுரியும் சுமை ஏற்றும் இறக்கும் தொழிலாளர்கள் என்றும் தெரிவித்தனர்.

அவர்களில் திரு இரா.கணேசன், திரு.ஆ.ஜீவன், திரு.இரா.சின்னசாமி மற்றும் திரு சி.சரவணன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டபோது கிடங்கில் சுமையை ஏற்றும் மற்றும் இறக்குவதற்கான கூலி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தர்மபுரி மண்டலம் மூலமாக அவரவர்தம் வங்கி சேமிப்பு கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது என்றும் கிடங்கு பணியாளர்கள் மூலம் எந்த தொகையும் கூலியாக வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தனர். இதுதொடர்பாக வட்ட வழங்கல் திரு வெ.ஜெகதீசன் அவர்கள் மேற்கண்ட நான்கு தொழிலாளர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்கள் கொடுத்த விளக்கமானது முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அந்தப் பணம் ஏற்கனவே எனக்கு கிடைத்த ரகசிய தகவல்படி அரவை முகவர்களால் லாரி ஓட்டுனர்கள் மூலமாக அவருக்கு கொடுக்கப்பட்ட கையூட்டு பணமாக இருக்கக் கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால் அந்த பணம் ரூ.21,000/-என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. பட்டியல் எழுத்தர் திருவி.மகேந்திரன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து 180/-ஆஜர் செய்து தனது சொந்தப் பணம் என்றும் செலவிற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆகவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதேபோல் கணினி தட்டச்சர் திரு.வி.கிரிதரன் அவர்களிடம் விசாரிக்க, அவர் அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.300/-ஐ எடுத்து ஆஜர் செய்து அதை தனது சொந்தப் பணம் என்றும் தனது கைசெலவிற்காக வைத்து உள்ளதாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்தால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கையின்போது தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் மாலை சுமார் 6.45 மணியளவில் அந்த அலுவலக கண்காணிப்பாளரும் இளநிலை தரக்கட்டுப்பாட்டு அலுவலருமான திரு பி.ஜெயபால் அவர்கள் அலுவலகத்திற்கு ஆஜராகி என்னிடம் அறிமுகம் செய்து கொண்டார். அந்த திடீர் தணிக்கையின் போது அலுவலக வருகை பதிவேடு, அலுவலக பதிவேடு சத்துணவுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி பணப்பதிவேடு வாயிற் பதிவேடு ஆகியவை என்னால் பார்வை இடப்பட்டது. அதற்கு அடையாளமாக அந்த பதிவேடுகளில் சம்பந்தப்பட்ட பக்கங்களில் நானும் அரசு சாட்சிகளும் கையொப்பங்கள் செய்தோம். பிறகு நேற்றையதினம் அரிசி தரம் பார்க்கப்பட்டு கிடங்கில் அரிசி மூட்டைகளை இறக்கி வைக்கப்பட்ட பின்பு வெளியே சென்ற லாரிகள் பற்றிய விபரங்கள் கேட்க, அதற்கு உண்டான ஆவணங்களை எடுத்து ஆஜர்படுத்தினார்.

அந்த ஆவணங்கள் பார்வையிட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 032915 நாள்: 04.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்
2. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி ஸ்ரீ பாலாஜி அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 4697நாள்: 05.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்
3. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி ஆர்.ஆர் அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 4362நாள்: 05.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்
4. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி மாதம்மாள் அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 032762நாள்: 06.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்
5. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி இரத்தினவள்ளி அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 032665 நாள்: 06.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்
6. தர்மபுரி மண்டல மேலாளர் அவர்களின் ந.க.எண் 0489/ 2020 நாள் 02.11.2020 ன்டி ஆண்டவர் அரவை ஆலை முகவருக்கு வழங்கப்பட்ட சரக்கு ஒப்படைப்பு உத்திரவு மற்றும் அந்த அரவை ஆலையின் சலான் எண் 4565 நாள்: 06.11.20 இன்படி கிடங்கு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட இன்வாய்ஸ்

மேற்கண்ட ஆவணங்கள் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு அந்த ஒளி நகல்களில் கண்காணிப்பாளர் திரு பி.ஜெயபாலன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு அந்த ஆவணங்கள் என்னால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட இன்வாய்ஸ் மூலம் கிடங்கில் பெறப்பட்ட அரிசியின் தரத்தை சரிபார்க்கும் பொருட்டு மாலை சுமார் 7.15 மணிக்கு கண்காணிப்பாளர் திரு.பி.ஜெயபாலன், பட்டியல் எழுத்தர் திரு.வி.மகேந்திரன் மற்றும் அரசு சாட்சிகளுடன் அந்த அரிசி மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் G2 கிடங்கிற்கு செல்லப்பட்டது.அங்கு லாட்டுகள் 7 மற்றும் 10 ஆகியவற்றில் மாத்தம் 3040 அரிசி மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த மூட்டைகளில் ஆங்காங்கே அரிசி மாதிரி எண்கள் 886 முதல் 891 வரையில் சுமார் 500 கிராம் அளவிற்கு சேகரம் செய்து கொண்டு மீண்டும் மாலை சுமார் 07.30 மணி அளவில் கண்காணிப்பாளரின் அலுவலகத்திற்கு திரும்பி வரப் பட்டது. அந்த மாதிரிகளில் இருந்து தலா 10 கிராம் அரிசி தனித்தனியாக சேகரம் செய்து அவைகளை அவர் தனித்தனியாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார். அந்த நேரத்தில் இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்கள் அந்த அலுவலக பட்டியல் எழுத்தர் திரு வி.மகேந்திரன் அவர்களிடம் தான் தேநீர் அருந்தி விட்டு திரும்பி வருவதாக சொல்லிவிட்டு அந்த அலுவலகத்தில் இருந்து வெளியில் சென்றுவிட்டதாக தகவல் தெரியவந்தது. கண்காணிப்பாளர் அந்த அரிசி மாதிரிகளை பகுப்பாய்வு சோதனை மேற்கொண்டதில் அந்த சோதனை முடிவுகள் ஆனது 2019-20 ஆம் ஆண்டின் அரசால் நிர்ணயிக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டு வழிகாட்டி கையேட்டின் திரிபுகளுக்கு உட்பட்டு இருந்தது தெரியவந்தது. இந்த நிகழ்வின்போது முறையாக தனிமனித இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டது. அனைத்து அலுவலர்களும் மற்றும் திடீர் தணிக்கையில் பங்குகொண்ட அலுவலர்களும் முகக் கவசங்கள் அணிந்து இருந்தனர் என்பதையும் உறுதி செய்து கொள்ளப்பட்டது. தேவைக்கேற்ப அவ்வப்போது அனைவரும் கிருமிநாசினி கொண்டு அவரவர்தம் கைகளை சுத்தம் செய்து கொண்டனர். இந்த திடீர் ஆய்வின்போது கடைசிவரையில் இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்கள் திரும்பி வரவே இல்லை.இந்த நிகழ்வுகள் குறித்து 10.11.2020 ஆம் தேதி மாலை 05.45 மணி முதல் இரவு 10 மணி வரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கையை தயார் செய்யப்பட்டது. அந்த நடவடிக்கையில் நானும் அரசு சாட்சிகளும் மற்றும் கண்காணிப்பாளரும் கையொப்பம் செய்தோம். இந்த செயல்முறை நடவடிக்கையின்போது அந்த அலுவலகத்தைவிட்டு வெளியே சென்ற இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்கள் திரும்பி அலுவலகத்திற்கு வராததால் அவருக்கு இந்த மகஜரின் நகல் வழங்க

7



இயலவில்லை. இளநிலை உதவியாளர் திரு வி.சி.நாகராஜன் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.21,000/-ஆனது அரவை மில் முகவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அரிசியின் தரம் குறித்தும் இதர குறைபாடுகள் குறித்தும் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக அவர்களிடமிருந்து அவர் கையூட்டாக கேட்டுப் பெற்றுக் கொண்ட பணமாக இருக்கக் கூடும் என்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால் அவர் மீது தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.4/AC/2020 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 படி இன்று 11.11 .2020 ஆம் தேதி பகல் 11.45 மணிக்கு வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.21,000/- ஆகியவற்றை தர்மபுரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பினேன்.

[signature] 11/11/20
Dy. Supdt. of Police,
Krishnagiri VAAC,
I/c Dharmapuri VAAC